தமிழ்நாட்டு இளைஞர்கள்

# த.வெ.க. அரசுக்கு தக்க பாடம் கற்பிக்கத் தயாராகி விட்டனர்!

## சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு வலைதளப் பதிவு!

**நெல்லை, ஆக.13-**

**“தமிழை பழித்தவனை தாயே தடுத்தாலும் விடாதே” என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வரிகளை நெஞ்சில் ஏந்திய தமிழ் இளைஞர்கள் த.வெ.க. அரசுக்கு தக்க பாடம் கற்பிக்க தயாராகி வருகிறார்கள் சி.எம். சார் என சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:-

தமிழக அரசு நிகழ்ச்சிகளிலும்,பொது நிகழ்ச்சிகளிலும் கல்வி நிறுவனங்களி லும் தமிழ்த்தாய் வாழ்த்தை முதலில் பாடுவதற்கு ஏதுவாக மனோன்மணியம் சுந்தரனார் எழுதிய பாடலை 1970 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம் நாள் “தமிழ்த்தாய் வாழ்த்து”பாடலாக அறிவித்து ஆணை வெளியிட்டார் அப்போதைய முதல்வர் கலைஞர் அவர்கள். அவர் வழிவந்த முன்னாள் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் “தமிழ்த் தாய் வாழ்த்தை” ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் தொடக்கத்தில் ஒலிப்பேழையின்றி அனைவரும் எழுந்து நின்று பாடவேண்டும் என 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ஆம் தேதி அரசாணை வெளியிட்டு அதன்படி தமிழ்த்தாய் வாழ்த்துக்குரிய மரியாதை வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் த.வெ.க. ஆட்சி வந்தபின் “தமிழ்த் தாய் வாழ்த்து” பாடலை தந்த மனோன்மணியம் சுந்தரனார் பெயர் தாங்கி நிற்கும் நெல்லை பல்கலைக்கழகம் ஆளுநர் பட்டமளிப்பு நிகழ்ச்சியில், தமிழ்த்தாய் வாழ்த்தை மூன்றாவது இடத்திற்கு தள்ளி அவமானப்படுத்திய போது “ஒன்றிய அரசின் சுற்றறிக்கை, ஆளுநரின் ஆணை” என்று கூறி த.வெ.க. அரசு பதுங்கி, ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்த உங்கள் இயலாமை சந்திசிரிக்கிறது CMsir?

சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்ததற்கு முதல் நாள்,ஒன்றிய அரசின் முழுக் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய சென்னை உயர்நீதி மன்றத்தின் 15 புதிய நீதிபதிகள் பதவியேற்பு விழாவில் “தமிழ்த் தாய் வாழ்த்து” மட்டுமே முதலில் இசைக்கப்பட்டு உள்ள நிலையில் ஒன்றிய அரசு நிகழ்ச்சி, ஆளுநர் பங்கேற்கும் நிகழ்ச்சி என்று சாக்கு போக்குச் சொல்லி தமிழை அவமானப் படுத்தும் “த.வெ.க. அரசே” திருந்திக்கொள்!

“தமிழைப் பழித்தவனை தாயே தடுத்தாலும் விடாதே”என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வரிகளை நெஞ்சில் ஏந்திய தமிழ் இளைஞர்கள் மாமி அரசுக்கு தக்க பாடம் கற்பிக்க தயாராகி வருகிறார்கள் CM sir?

ஏற்கனவே“தமிழ்த் தாய் வாழ்த்து” பாடலுக்கு இருந்த அதிகாரத்தை பா.ஜ.க.விடம் அடகு வைத்துவிட்டு சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து மக்களை ஏமாற்றும் த.வெ.க. அரசே மசோதாவாக சட்டமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றி ஆளுநர் ஒப்புதலுடன் சட்டமாக்கத் தயங்குவது ஏன் CM Sir?

இவ்வாறு அவர் தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

மாணவர்களின் திறன் வளர்ச்சியில்

# கல்வி இடைவெளியை நீக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா?

## மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் கேள்வி!

*புதுடெல்லி,ஆக.13-*

ஏழை மற்றும் விளிம்பு நிலை சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறதா? திறன் வளர்ச்சியில் கல்வி இடைவெளியை போக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? என ஒன்றிய அரசை தி.மு.க. எம்.பி. கிரிராஜன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்ற கூட்டத் தொடரில் கலந்துகொண்டுள்ள தி.மு.க. எம்.பி. இரா.கிரிராஜன் திறன் வளர்ச்சியில் கல்வி இடைவெளியை போக்குவது குறித்து, ஒன்றிய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சரிடம் கேள்விகளை எழுப்பியுள்ளார்.



அதில், தொழில்துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு புதுமையான திறன் மேம்பாடு மற்றும் பயிற்சித் திட்டங்களை எடுத்துள்ளதா? அவை பல்வேறு தொழில்துறைகளில் அறிவியல் முன்னேற்றத்துடன் ஒத்துப்போகச் செய்கிறதா? ஏழை மற்றும் விளிம்பு நிலை சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு சிறப்பு மற்றும் மேம்பட்ட திறன் பயிற்சி அளிப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறதா? அரசு அல்லது FICCI, CII, ASSOCHAM, NASSCOM ஆகியவை தொழில் மற்றும் கல்வி ஆகியவற்றுக்கான இடைவெளி குறித்து ஏதேனும் ஆய்வுகள் செய்துள்ளனவா? என்ற கேள்விகளை எழுப்பி இருந்தார்.

அதற்கு பதிலளித்துள்ள ஒன்றிய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்தின் இணை அமைச்சர் ஜெயந்த் சௌத்ரி, இந்திய இளைஞர்களை எதிர்காலத்துக்கு தயார்படுத்துவதற்கும், தொழில்துறை சார்ந்த திறன்களைக் கொண்டிருப்பதற்கும் உதவுவதை நோக்கமாகக் கொண்டு இந்திய அரசின் திறன் இந்தியா இயக்கத்தின் (Skill India Mission - SIM) செயல்படுத்தப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். இந்த சிம் திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் உள்ள அனைத்து பிரிவினருக்கும் பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY), ஜன் ஷிக்ஷன் சன்ஸ்தான் (JSS), தேசிய தொழிற் பயிற்சி ஊக்குவிப்புத் திட்டம் (NAPS), தொழில் பயிற்சி நிறுவனங்கள் (ITIs) மூலம் கைவினைஞர் பயிற்சித் திட்டம் (CTS) ஆகியவை மூலம் திறன், மறு திறன் மற்றும் உயர் திறன் பயிற்சிகளை வழங்குவதாக குறிப்பிட்டுள்ளார்.

2025-26ஆம் நிதி யாண்டில் திறன் பயிற்சிக்காக, PMKVY திட்டத்தில், நாடு முழுவதும் ரூ. 269.28 கோடியும், அதில் தமிழ்நாட்டுக்கு ரூ. 4.96 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது; JSS திட்டத்தில், நாடு முழுவதும் ரூ. 149.27 கோடியும், அதில் தமிழ்நாட்டுக்கு ரூ. 4.52 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது; NAPS திட்டத்தில், நாடு முழுவதும் ரூ. 567.27 கோடியும், அதில் தமிழ்நாட்டுக்கு ரூ.64.47 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது என இளைஞர்களின் திறன் மேம்பாடு குறித்து தி.மு.க. எம்.பி. கிரிராஜன் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசு பதிலளித்துள்ளது.

தமிழ்நாட்டில் விளையாட்டு

# உள்கட்டமைப்பை வலுப்படுத்த ஒன்றிய அரசின் நடவடிக்கை என்ன?

## மக்களவையில் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி!

**புதுடெல்லி, ஆக.13–**

**தமிழ்நாட்டில் ஒலிம்பிக் அகாடமி அமைப்பதற்கான எந்த முன்மொழிவும் கிடைக்கவில்லை எனக் கூறும் ஒன்றிய அரசு; மாநிலத்திற்கு தெளிவான ஒன்றிய ஆதரவு கட்டமைப்பு இல்லை என மக்களவையில் ஈரோடு கே.இ.பிரகாஷ் குற்றம்சாட்டினார்.**



கேலோ இந்தியா திட்டம் (KIS) அல்லது வேறு ஏதேனும் ஒன்றியத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசிடமிருந்து ஒலிம்பிக் அகாடமி அமைப்பதற்கான முன்மொழிவு ஒன்றிய அரசுக்கு கிடைத்துள்ளதா, அத்தகைய முன்மொழிவுகளின் பரிசீலனை மற்றும் ஒப்புதல் நிலை, நிதியுதவி உள்ளிட்ட விவரங்கள், விளையாட்டு அகாடமிகளை அமைப்பதற்கான ஒன்றிய அரசின் நிதியுதவி வழங்கும் தகுதி அளவுகோல்கள் அல்லது வழிகாட்டுதல்கள் மற்றும் தமிழ்நாட்டில் அடித்தள விளையாட்டு உள்கட்டமைப்பு மற்றும் விளையாட்டு வீரர்களின் வளர்ச் சியை வலுப்படுத்த ஒன்றிய அரசு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் (டாக்டர் மன்சுக் மாண்டவியா) பதில் வருமாறு :-

(a) இத்தகைய எந்த முன்மொழிவும் இந்த அமைச்சகத்திற்கு கிடைக்கவில்லை.

(b) எழவில்லை.

(c) மற்றும் (d) ‘விளையாட்டு’ என்பது மாநிலப் பட்டியலில் உள்ள பொருளாக இருப்பதால், விளையாட்டுத் துறையின் வளர்ச்சி, விளையாட்டு அகாடமிகளை அமைத்தல், அடித்தள விளையாட்டு உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் விளையாட்டு வீரர்களின் மேம்பாடு உள்ளிட்ட பொறுப்புகள் முதன்மை யாக சம்பந்தப்பட்ட மாநில/ஒன்றியப் பிரதேச அரசுகளிடம் உள்ளன.

நாட்டில், தமிழ்நாடு மாநிலத்தையும் உள்ளடக்கி, விளையாட்டுத் துறையின் வளர்ச்சியை வலுப்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்கள் மற்றும்

விளையாட்டு நடவடிக்கைகள் மூலம் முக்கிய இடைவெளிகளை நிரப்புவதன் வாயிலாக ஒன்றிய அரசு இந்த முயற்சி களுக்கு துணைபுரிகிறது:

i. கேலோ இந்தியா விளையாட்டுத் துறை மேம்பாட்டிற்கான தேசியத் திட்டம்;

ii. தேசிய விளையாட்டு சம்மேளனங்களுக்கு (NSFs) உதவி;

iii. சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்கள் மற்றும் அவர்களது பயிற்சியாளர்களுக்கு ரொக்க ஊக்கத் தொகை;

iv. தேசிய விளையாட்டு விருதுகள்;

v. சிறப்புமிக்க விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதியம்;

vi. பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா தேசிய விளையாட்டு வீரர்கள் நலத் திட்டம்;

vii. தேசிய விளையாட்டு மேம்பாட்டு நிதியம்;

viii. இந்திய விளையாட்டு ஆணையம் (SAI) மூலம் விளையாட்டுப் பயிற்சி மையங்களை நடத்துதல்; மற்றும்

ix. விளையாட்டு அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக்கான தேசிய மையம் (NCSSR).

மேற்கண்ட திட்டங்கள் குறித்த விவரங்கள் அமைச்சகம் மற்றும் இந்திய விளையாட்டு ஆணையத்தின் இணையதளங்களில் பொது மக்கள் பார்வைக்காக கிடைக்கின்றன.

கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் உள்ள பல்வேறு விளையாட்டு வசதிகள், அதாவது விளையாட்டு உள்கட்டமைப்பு, கேலோ இந்தியா மையங்கள் (KIC), கேலோ இந்தியா மாநில சிறப்பு மையங்கள் (KISCE) மற்றும் கேலோ இந்தியா அங்கீகாரம் பெற்ற அகாடமிகள் (KIAA) ஆகியவற்றுடன், தமிழ்நாடு மாநிலத்தையும் உள்ளடக்கிய நாடு முழுவதும் உள்ள கேலோ இந்தியா விளையாட்டு வீரர்கள் (KIA) மற்றும் பயிற்சியாளர்கள் குறித்த விவரங்கள் அமைச்சகத்தின் https: //dashboard.kheloindia.gov.in என்ற இணையதள டாஷ்போர்டில் பொதுமக்கள் பார்வைக்காக கிடைக்கின்றன.

மேற்கண்டவாறு கே.இ.பிரகாஷ் எம்.பி.க்கு பதிலளிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் ஓய்வுபெற்ற

# விளையாட்டு வீரர்களுக்காக ஒன்றிய அரசின் நலத்திட்டங்கள் என்ன?

## மக்களவையில் ஆ.மணி கேள்வி!

*புதுடெல்லி, ஆக. 13 -*

தமிழ்நாட்டில், குறிப்பாக தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற விளையாட்டு வீரர்கள் உள்ளிட்டோருக்கு நிதியுதவி, ஓய்வூதியம், மருத்துவ உதவி, காப்பீடு மற்றும் இதர நலத்திட்டங்கள் ஏதேனும் ஒன்றிய அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறதா? அவ்வாறு இருப்பின், அதன் விவரங்கள் என்ன?



கடந்த மூன்று ஆண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டில், தமிழ்நாட்டை சேர்ந்த ஓய்வுபெற்ற விளையாட்டு வீரர்கள், குறிப்பாக தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், இத்திட்டங்களின் மூலம் பயனடைந்துள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? விளையாட்டுப் பிரிவு வாரியான விவரங்கள் என்ன?

ஓய்வுபெற்ற விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வுக்குப் பிந்தைய காலத்தில் வேலைவாய்ப்பு, பயிற்சியாளர் பணி, விளையாட்டு நிர்வாகப் பொறுப்புகள், திறன் மேம்பாடு மற்றும் வாழ்வாதார உதவிகள் வழங்குவதற்காக ஒன்றிய அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதா?

ஓய்வுபெற்ற விளையாட்டு வீரர்களின் சமூகப் பாதுகாப்பு, மருத்துவப் பாதுகாப்பு மற்றும் நிதி நிலைத்தன்மையை மேம்படுத்துவதுடன், இளம் விளையாட்டு வீரர்களுக்கு வழிகாட்டிகளாகவும் பயிற்சி அளிப்பவர்களாகவும் அவர்கள் தொடர்ந்து பங்களிப்பதை ஊக்குவிக்கும் வகையில், குறிப்பாக தருமபுரி மாவட்டத்தில் கூடுதல் நடவடிக்கைகள் ஏதேனும் மேற்கொள்ளப் பட உள்ளதா? அவ்வாறு இருப்பின், அதன் விவரங்கள் என்ன? என்று தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி மக்களவையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர். மன்சுக் மாண்டவியாவிடம் கேள்வி எழுப்பினார்.

ஒதுக்கப்பட்ட

# ஓய்வூதிய நிதியை குறைத்திருப்பது அதிர்ச்சி அளிக்கிறது!

## தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றப் பொதுச் செயலாளர் நா.சண்முகநாதன் அறிக்கை!

*சென்னை, ஆக. 13 -*

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் ஓய்வூதியம், ஆசிரியர் தகுதித் தேர்வு ஆகியவற்றால் ஏற்பட்டு உள்ள பதட்டத்தையும் அச்சத்தையும் போக்கிட விரைந்து நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநில பொதுச் செயலாளரும் ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளருமான முனைவர் மன்றம் நா. சண்முகநாதன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.



இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

முறையான கல்வித் தகுதியுடன் நியமனம் பெற்று பல ஆண்டுகள் கல்விப் பணியாற்றிய ஆசிரியர்கள் தங்கள் பணியை தொடர்வதற்கு ஆசிரியர் தகுதித் தேர்வு எழுத வேண்டும் என்ற உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.அதனால் ஆசிரியர்கள் தேர்வு எழுத தயாரிப்பு பணியில் ஈடுபடுவதால் மாணவர்களின் கற்பித்தல் பணிக்கு இடையூறாக உள்ளது.

தமிழ்நாடு இந்தியாவில் கல்வி வளர்ச்சியில் சிறந்த மாநிலமாக உள்ளது.அதை உருவாக்க பாடுபட்ட தொடக்கக் கல்வி ஆசிரியர்கள் இன்று தாங்கள் பணியில் தொடர்ந்து நீடிப்போமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. நீண்ட காலம் பணியாற்றிய ஆசிரியர்களின் பணியை பாதுகாத்திட மத்திய அரசு பாராளுமன்றத்தில் சட்ட திருத்தம் கொண்டு வர வலியுறுத்தி தமிழக சட்டமன்றத்தில் தனிச்சட்டம் இயற்ற வேண்டும்.

தமிழக வெற்றி கழகத்தின் தேர்தல் அறிக்கையில் பழைய ஓய்வூதிய திட்டம் அமல்படுத்தப்படும்எனக் கூறி வாக்குகள் சேகரித்தனர். ஆசிரியர் அரசு ஊழியர்களின் நம்பிக்கைகளை பெற்று தமிழக வெற்றி கழக ஆட்சி உருவாகியது.

முதல் நிதிநிலை அறிக்கையில் இடைக்கால பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட ஓய்வூதியத்திற்கான நிதியினை குறைத்து இருப்பது ஆசிரியர் அரசு ஊழியர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது

ஒன்றிய அரசு கடன் பெற அனுமதி வழங்கினால் TAPS திட்டத்தை அமல்படுத்தலாம் என்று ஓய்வூதியம் தொடர்பாக அமைக்கப்பட்ட அலுவலர் குழுவின் தலைவர் ககன் சிங் பேடி பரிந்துரை செய்துள்ளார் என்றும்,

ஒன்றிய அரசு கடன் பெற ஒப்புக்கொண்டால் TAPS திட்டம் அமுல்படுத்தபடும் என்றும் நிதி அமைச்சர் சட்டமன்றத்தில் தெரிவித்துள்ளார். இது மேலும் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களை பதட்டம் அடையச் செய்துள்ளது.

இடைக்கால நிவாரணம் மட்டுமே நீடிக்க கூடும்என்பது ஏற்க இயலாது.

தமிழ்நாட்டில் ஆசிரியர் அரசு ஊழியர்களின் ஓய்வூதிய சேமிப்பு நிதி ஒரு லட்சம் கோடிக்கு மேல் இருப்பில் இருக்கிறது . மாதம்தோறும் ஊதியத்தில் 10% பங்களிப்பினை தொடர்ந்து செலுத்தி வருகின்றனர். அவற்றின் நிலை பற்றி ஆசிரியர் அரசு ஊழியர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

நிதியமைச்சரின் அறிவிப்புகளால் ஆசிரியர் அரசு ஊழியர்களின் குறிப்பாக அரசு திட்டங்களை அடித்தட்டு மக்களுக்கு கொண்டு சேர்க்கும் பணியில் செயலாற்றும் அரசு ஊழியர்களுக்கும் கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்ற இலக்கினை அடைய சிறப்பாக பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் தேர்தல் அறிக்கையில் கூறியவாறு பழைய ஓய்வூதிய திட்டத்தினை பட்ஜெட் கூட்டத்தொடரிலேயே அறிவித்து ஆசிரியர் அரசு ஊழியர்களின் பதட்டத்தை குறைத்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# எஸ்.பி. சற்குணபாண்டியன்

## ஆகஸ்ட் 13 (2016)



‘மாணவி சற்குணம்’ என்ற பெயரில் கழக மேடைகளில் பேசி வந்த சற்குணபாண்டியன் சிறுமியாக இருந்தபோதே, கழகக் கொள்கைகளை இதயத்திலே பதிய வைத்துக் கொண்டவர். இவரது தந்தை பழம் பெரும் சுயமரியாதைக்காரரான பொன்னுசாமி அவர்களால் ஊக்கமும் உற்சாகமும் ஊட்டப்பட்டு, திராவிட இயக்கத்தின் தீபமாய், மாதர்குல திலகமாய் விளங்கியவர்.

“சொல்லின் செல்வி” என்று பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்ட இவர், மாணவரணி, மகளிர் அணி, வடசென்னை மாணவரணி, சென்னை மாவட்ட மகளிர் அணி, மாநில மகளிர் அணியின் செயலாளர் என்று படிப்படியாகப் பொறுப்பேற்று, கழக துணைப் பொதுச்செயலாளராக பொறுப்பு வகித்தார்.

1971இல் சென்னை மாநகராட்சிக்கு நியமன உறுப்பினராகவும் – 1989, 1996 ஆகிய இரண்டு முறை சென்னை இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, 1996ல் தலைவர் கலைஞர் அவர்கள் அமைச்சரவையில் சமூக நலத்துறை அமைச்சராக இருந்தார்.

மதுரை, திருச்சி, சென்னை ஆகிய இடங்களில் மண்டல மகளிர் மாநாடு நடத்தி ஒன்றிய, நகர மகளிர் அமைப்புகளை உருவாக்கிய பெருமை இவரைச் சாரும்.

17.9.1988 அன்று சென்னையில் நடைபெற்ற தேசிய முன்னணி ஊர்வல அணிவகுப்பில் பல்லாயிரக்கணக்கான மகளிரைப் பங்கேற்கச் செய்து ஊர்வலத்திற்கு சிறப்பு சேர்த்ததன் காரணமாக சென்னை கடற்கரையில் நடைபெற்ற தேசிய முன்னணித் துவக்க விழாப் பொதுக்கூட்டத்தில் கலைஞர் திருக்கரத்தால் தங்கச் சங்கிலி பரிசு பெற்றவர்.

திருச்செந்தூர் நீதிகேட்டு நெடும்பயணத்தில் தலைவர் கலைஞருடன் பயணம் மேற்கொண்டவர். கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் மகளிர் படை திரட்டி அதற்குத் தலைமை தாங்கி சிறை சென்றவர்.

இளம் பிராயத்திலிருந்து இவருக்கு இயக்கத்திலிருந்த ஆர்வத்தையும், தியாகத்தையும், பேச்சாற்றலையும் பாராட்டும் வகையில் கழகத்தின் சார்பில் நடைபெற்ற ஐம்பெரும் விழாவில் (1990) தலைமைக் கழகத்தின் சார்பில் கலைஞர் விருதினை தலைவர் கலைஞர் அவர்கள் இவருக்கு வழங்கி சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**